இதனைப்பற்றி என்ன? ....

# பத்துக்கட்டளைகள்

*இது ஒவ்வொரு இடத்தையும் சார்ந்த மனிதர்களுக்குத் தேவன், பரிசுத்த சீனாய் மலைமீது உயரேநின்ற தனது உண்மைமிக்க மோசேமூலமாக வழங்கிய பத்துப்பகுதிகளாலான நிச்சயமான கட்டளையாகும். இரங்கும் கர்த்தாவே!**

இந்தத் துண்டுப்பிரதியானது பத்துக் கட்டளைகளைப் படிப்பதற்கும் உங்களது நாளாந்த வாழ்விலே அதனைப் பயன் படுத்துவதற்கும் உதவி செய்திடும்.

பத்துக் கட்டளைகளுக்கு ஏற்ப எம்மைப் பரிசோதித்துப் பார்க்கும்போது எமது வாழ்வுகளிலே பாவத்தை நாம் இனங்கண்டு கொள்கிறோம். பாவம் என்பது தேவன் வழங்கியுள்ள ஒரு கொடையை எடுத்து அதனைத் தேவன் பாவிக்க விரும்பாத வழிமுறையிலே பயன்படுத்துவதாகும். ஒவ்வொரு கட்டளையும் தேவனுடைய கொடைகள் எப்படியாக அவரது கனத்துக்கும் மகிமைக்குமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் எமக்குக் கற்பிக்கும்.

## I - உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்

*நான், நான்மாத்திரமே தேவன், உனது ஆண்டவர்; அனைத்து விக்கிரகங்களும் அருவருக்கப்படவேண்டியவை. என்ன நம்பு, எனது சிங்காசனத்துக்கு துணிந்து அடியெடுத்து வா, மெய்யாகவே என்னை மாத்திரமே நேசி. இரங்கும் கர்த்தாவே!*

இருதயம் எங்கே தேவனுடைன் சரியாக உள்ளதோ, இதர அனைத்துக் கட்டளைகளும் பின் தொடரும். ஒரு கட்டளை மீறப் பட்டால், அது மனித இதயமானது, இயல்பாகவே, தேவனிடம் இருந்து விலகியிருப்பவர்கள் எனும் உண்மைக்கான அறிகுறியாகும். தேவன் எம்மைத் தனக்குச் சொந்தமானவர்களாகவே படைத்தார். அவர் எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாக தம்மைத்தாமே எமக்கு வழங்கியிருக்கிறார். எமது அதிகூடிய ராஜவிசுவாசத்தின், பிரியமான நம்பிக்கைகளின், ஆளமான பாசத்தின் எந்த ஒரு கோரிக்கையும் நமது தேவர்களிலேயே உள்ளதுடன் மெய்யான தேவன் எமது வாழ்விலே எடுக்க விரும்பும் இடத்தை அவை எடுத்துவிடும். வார்த்தையினாலும் மற்றும் திருவருட்சாதனங்களினூ டாகவும் பரிசுத்த ஆவியானவர் எமது இதயங்களிலே ஏனைய அனைத்தையும்விட தேவனில் மெய்யான பயத்தையும், அன்பையும், நம்பிக்கையையும் செயற்படுத்துகிறார். (ஏசாயா 42:8; மத்தேயு 4:10; நீதிமொழிகள் 11:28; சங்கீதம் 118:8; யோவான் 14:15; பிலிப். 2:13)

## II – தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக (தப்பாகப் பயன்படுத்தாயாக)

*எனது பரிசுத்த நாமத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தாது, எனது சத்திய வார்த்தையை இழிவுபடுத்தாது இருப்பாயாக. நான் கூறுவதையும் செய்வதையுமே நல்லதும் சத்தியமுமாகத் துதிப்பாயாக. இரங்கும் கர்த்தாவே!*

நாம் பிதாவுடைய நாமத்திலும், சுதனுடையை நாமத்திலும் மற்றும் பரிசுத்த ஆவியுடைய நாமத்திலும் ஞானஸ்நானம் பெற்றபோது கர்த்தர் எமக்கு அரும்பெரும் பொக்கிஷத்தை வழங்கினார். எமது கர்த்தரின் நாமம் பரலோகத்திலோ அல்லது பூலோகத்திலோ உள்ள எல்லா நாமத்துக்கும் மேலான நாமமாகும். அவரது நாமத்துடன் இரட்சிக்கும் அவரது வல்லமையும் வருகிறது. பரிசுத்த திரித்துவத்தின் நாமத்தை ஒரு சாப வார்த்தையாகப் பயன் படுத்துவதோ அல்லது நேர்மையற்ற வீனான நோக்கங்களுக்காக அந்த நாமத்தால் சத்தியம் பண்ணுவதோ, அல்லது அவரது வார்த்தையைப் பற்றி மக்களைத் தப்பாக நடாத்துவதோ பாவமாகும்.

கர்த்தரின் நாமத்தை நாம் எந்த வேளையிலும், வாழ்வின் எந்தச் சூழ்நிலையிலும், எந்த ஒரு தேவைக்குமாக அழைக்கலாம் என்பதை நாம் அறிவது என்னே நன்மை. கர்த்தர் எம் உதடுகளைத் திறப்பதால், நாம் ஜெபிக்கும்போது அவரது பரிசுத்த நாமத்திலே அவரைத் துதித்து, நன்றிகளை ஏறெடுக்கிறோம். (யாத். 20:7; லேவி. 24:15; யாக்கோபு 3:9–10; லேவில. 19:12; எரேமியா 23:31; சங்கீதம் 50:5; சங்கீதம் 103:1; எபேசியர் 5:20; பிலிப். 2:10–11).

## III – ஓய்வுநாளைப் பரிசுத்தமாக அனுசரிக்க மறவாதே.

*வீட்டிலே சமாதானம் நிரம்பும்படியாக ஆராதனை நாளைக் கொண்டாடி, ஜெபித்து, தேவன் உன்னிலே செயற்படும் பொருட்டாக நீ செய்யும் வேலையை ஒதுக்கி வைப்பாயாக. இரங்கும் கர்த்தாவே!*

தேவன் அவரது வார்த்தையின் கொடையுடன் எம்மை ஆசிர்வதித்திருக்கிறார். தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும் போது அதனை மகிழ்வுடன் செவிமடுத்து அதனைப் பரிசுத்தமாக நாம் பற்றிக்கொள்கிறோம். மேலும் தேவனுடைய வார்த்தையை எமது அனுதின ஜெபத்திலே பயன்படுத்தும்போதும் நாம் தேவனைக் கனம் பண்ணுகிறோம். சிலவேளைகளிலே நாம் பின்வருமாறு சிந்திக்கும் படியாகச் சோதிக்கப்படுகிறோம்: "சபைக்குச் செல்லாமல் நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கலாம்." அது "உயிர்வாழ்வதற்காக நான் இன்று சாப்பிடத் தேவையில்லை" என்று கூறுவதுபோலவே மெய்யானதாக இருக்கும். ஆனால் நாம் உணவு அருந்தாமல் எவ்வளவு காலம் உயிர்வாழக்கூடும்? நாம் சபைக்குச் செல்லக் கூடுமாய் இருக்கிறது, ஏனெனில், தேவன் தனது கொடைகளுடன் கூட எம்மிலே செயற்படுகிறார். ஆதலால் நாம் அவருடைய வார்த்தையைப் பரிசுத்தமாகப் பற்றிக்கொண்டு களிப்புடன் அதற்குச் செவிமடுத்து அதனைக் கற்றுக்கொள்கிறோம். (அப். நட. 2:42, 46; எபி. 10:25; மத். 12:8; கொலோசே. 2:16–17; எபி. 4:9–10; யோவான் 8:47; லூக்கா 10:16; ஏசாயா 66:2; சங்கீதம் 26:8; அப். நட. 2:42; கொலோசே. 3:16)

## IV – உன் தந்தையையும் தாயையும் கனம்பண்ணுவாயாக.

*உங்களது பெற்றார்களையும் எஜமானர்களையும் நீங்கள் அனுதினமும் கனம்பண்ணி, கைக்கு வரும் சகல வழிகளிலும் அவர்களைச் சேவிப்பாயாக; அப்போது நீ வாழும் இடத்திலே நீடித்து வாழ்வாய். இரங்கும் கர்த்தாவே!*

தேவன் நமக்குப் பெற்றோர்களை, மேய்ப்பர்களை மற்றும் இதர அதிகாரங்களை எமது நன்மைக்காக வழங்கியுள்ளார். அவர்கள் அவரது பிரதிநிதிகளாகச் சேவிக்கின்றனர். அவர்களூடாக, தேவன் எம்மையும் எமது உலகத்தையும் ஒழுங்கான அதிகாரத்துடன் செழிப்பாக ஆசீர்வதிக்கிறார். பாவம் கொண்டுவரும் தாறுமாறான நிலைமைக்கு எதிரானதாக இது உள்ளது. பெற்றோரையும் மற்றும் அதிகாரத்தில் உள்ள பிறரையும் கனம்பண்ணுவதால் நாம் தேவனைக் கனம் பண்ணுகிறோம். (நீதி. 23:22; ரோமர் 13:2; எபே. 6:2–3; 1 தீமோ. 5:4; ரோமர் 13:7; கொலோசே. 3:20; தீத்து 3:1; நீதி. 23:22)

## V – கொலை செய்யாதிருப்பாயாக

*கோபத்தைக் கடிவாளமிடு, கொல்லாமலும், தீங்கு செய்யாமலும் வெறுக்காமலும் இரு. தீமைக்குத் தீமையைப் பதில் வையாதே. பொறுமையாயும், அடக்கமான மனதினனாயும் இரு. உனது எதிரிக்கு நீ இரக்கமுள்ளவன் என்று உணரச்செய். இரங்கும் கர்த்தாவே!*

மனித வாழ்வானது தேவனுடைய சிருஷ்டிப்பிலே மகுடக் கொடையாகும். கொலையினூடாகவோ, கருக்கலைப்பினாலோ, கருணைக்கொலையினூடாகவோ அல்லது தற்கொலையூடாகவோ மனித உயிரை நாம் முடித்துவிடக்கூடாது. தப்பெண்ணம், மதவெறி அல்லது அதிஷ்டம் குறைந்தவர்களைத் துஷ்பிரயோகிப்பது ஆகியவை தவிர்க்கப்படவேண்டியவைகள். எமது சிந்தனைகளாலும், நிச்சயமாகவே எமது வார்த்தைகளாலும் மற்றும் நேரடியாகவே எமது செயல்களாலும் ஒருவரைக் "கொலை" செய்யக்கூடும் என்பதை இனங்கண்டுகொள்கிறோம். தேவனுடைய பிரதிநிதியாக, எம்மைப் பாதுகாக்கவும், ஒழுங்கைப் பேணவுமென அரசாங்கத்துக்குக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கவும், துன்மார்க்கரைத் தண்டிக்கும்படியாக நீதியான யுத்தங்கள் செய்யவும் அதிகாரம் வழங்கியிருக்கிறார். நாம் கிறிஸ்துவிலே இரக்கத்தையும் தயவையும் தொடர்ச்சியாகப் பெறும்போது, எமது அயலவர்களுக்கு அவர்களது தேவையில் உதவிசெய்கிறோம். (ஆதி. 9:6; மத். 26:52; எரே. 1:5; நீதி. 31:8; மத். 5:22; 1 யோவான் 3:15; எபே. 4:26; ரோமர் 13:4).

# பத்துக் கட்டளைகள் பற்றி என்ன?

## VI – விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

*விசுவாசமாயிருந்து திருமண வாக்குறுதியைக் கைக்கொள்வாயாக; அதிலிருந்து வழிவிலக்கும் சிந்தையை அனுமதிக்காதே. உனது அனைத்து நடத்தையினையும் பாவத்திலிருந்து விடுவித்ததாகக் காத்துக்கொள். சுயகட்டுப்பாடுள்ளவனாயும் ஒழுக்கமுள்ளவனாயும் இருப்பாயாக. இரங்கும் கர்த்தாவே!*

தேவன் திருமணத்தையும், எமது பாலியலையும் மற்றும் எமது குடும்பத்தையும் பெரிய ஆசிர்வதாங்களாக வழங்கியுள்ளார். திருமணமானவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள் ஆகிய இருதிறத்தாரிலும் தேவன் எதிர்பார்க்கும் பாலியல் தூய்மைக்கு குறுகியதான எமது சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவைகளை இந்தக் கட்டளை எதிர்ப்படுகிறது. திருமணமானவர் கள், தனியானவர்கள் ஆகிய இருதிறத்தாரும் உட்பட அனைவருமே திருமணத்தை அவரது கொடையாகக் கனம்பண்ணிக் காத்துக்கொள் ளும்படி விரும்புகிறார். கிறிஸ்துவில், நாம் பாலியல் தூய்மையானதும் பண்பார்ந்ததுமான வாழ்வுகளை வாழும்படிக்கும், தேவன் நமக்குத் தரும் கணவனை அல்லது மனைவியை கனம்பண்ணி நெஞ்சார ஆதரிக்குப்படிக்கும் விடுவிக்கப் பட்டிருக்கிறோம். (ஆதி. 2:24–25; மாற்கு 10:6–9; எபி. 13:4; தீத்து 2:11–12; 1 கொரி. 6:18; 1 கொரி. 6:18; எபே. 5:3–4; 1 கொரி. 6:19–20).

## VII – களவு செய்யாதிருப்பாயாக

*நீ களவெடாமல் அல்லது இரவும் பகலும் பிறர் பிரயாசத்துடன் உழைத்தை ஏமாற்றாதபடிக்கும் இருப்பாயாக; மாறாக நாட்டில் உள்ள வறியவர்களுக்கு ஊட்டும்படியாக உனது தயாளக் கரங்களை விரிப்பாயாக. இரங்கும் கர்த்தாவே!*

நாம் கொண்டுள்ள அனைத்துமே தேவனிடம் வந்த கொடை, அவரது கனத்துக்கும் மகிமைக்குமாகப் பயன்படுத்தும்படி அவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற நம்பிக்கை அவை. நாம் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளும்படி எதையாகிலும் நாம் செய்யும்போது இது தலைகீழாக மாறுகிறது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆவியினால் களவெடுக்காதபடிக்கு அல்லது ஏமாற்றாதபடிக்கு நடாத்தப்பட்டு, அதற்கு மாறாக பிறரைப் பேணுவதற்கும் அவர்களுடையதை மேம்படுத்துவதற்கும் அவசியமானதைச் செய்யும்படியாக நடாத்தப்படுகிறோம். (எபே. 4:28; பிலிப். 2:4; எபி. 13:16; 1 யோவான் 3:17).

## VIII – உங்களது அயலானுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக

*பொய்சொல்லும் சாட்சியம் கூடவே கூடாது, புரளியால் உன் நாவு துரோகம் செய்யாதிருக்கட்டும். கபடற்ற வாழ்வைத் தழுவி அவமானத்துக்குள் வீழ்வதற்கெதிராகக் கேடகமிடுவாயாக. இரங்கும் கர்த்தாவே!*

எமது நன்மதிப்பானது தேவனிடமிருந்து கிடைக்கும் இன்னுமோர் கொடை. ஒருசிலருக்குத் தேவன் துன்மார்க்கரின் நடத்தையை நியாயந்தீர்த்துத் தண்டிக்கும் கடமையை வழங்கி யுள்ளார். ஆனால் அது எமது வாழ்வின் அழைப்பாக இராவிட்டால், வேறு மக்களின் நன்மதிப்பைக் களங்கப்படுத்திட எமக்கு உரிமை கிடையாது. தனி நபர்களைப்பற்றியோ அல்லது சூழ்நிலைகளைப் பற்றியோ அவர்கள்மீது மிகச்சிறந்த கட்டமைப்பைச் சார்த்தும்படியாகப் பேசுவதற்கும், தேவன் எமது கர்த்தராகிய கிறிஸ்து மூலமாக எம்மைத் தயவாகவும், இரக்கத்துடனும், பரிவிரக்கத்துடனும் நடாத்துவதுபோலவே நாமும் அவர்களைப்பற்றி தயவுநிறைந்த முறையிலே பேசுவதற்கும் கடப்பாடு எமக்கு உள்ளது. (எபே. 4:25; யாக்கோபு 4:11; 1 கொரி. 13:7; 1 பேதுரு 4:8).

## IX மற்றும் X – பிறனுடைய மனைவியை இச்சியாதிருப் பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

*உன்னுடைய அயலவனின் காணி, அவனது பொருட்கள், வீடு, மனைவி அவற்றை உனக்காக விரும்பாதே. உன்னைப்போலவே உன் அயலானையும் தேவன் ஆசிர்வதிக்கும்படி ஜெபிப்பாயாக. இரங்கும் கர்த்தாவே!*

இந்தக் கடைசி இரண்டு கட்டளைகளிலே தேவன் எமக்கு வழங்கியுள்ள பொருண்மியக் கொடைகளிலே திருப்திப்படும்படி கூறுகிறார். எமது தேவைகள் அனைத்தையும் தேவன் வழங்குவார். எமது அயலானுக்கு நாம் உதவி செய்யவும், அவனுக்கு நல்லதை விரும்பவும், அவனது நல்ல அதிஷ்டத்துக்காக அவனுடன் களிகூரவும் அல்லது அவனது தேவையிலே உதவவும் எமக்குச் சுயாதீனம் உள்ளது. கிறிஸ்து எமக்குச் சேவித்தது போலவே, நாம் பிறரைச் சேவிக்கவேண்டும். இந்த இரண்டு கட்டளையுடனுப் நாம் திரும்பவும் முதலாவது கற்பனையிலே எம்மைக் காணமுடியும், ஏனெனில் தேவனுக்குப் பயந்து அவரை நேசித்து அவரை நம்பும் இருதயம் தேவன் தரும் கொடைகளிலே திருப்திப்படும். ((ரோமர் 7:8; 1 தீமோ. 6:8–10; பிலிப். 4:11, 1 தீமோ. 6:6; எபி. 13:5).

## பத்துக் கட்டளைகளைத் தேவன் எமது வாழ்விலே எப்படியாகப் பயன்படுத்துகிறார்?

*நீங்கள் பாவத்தில் இருந்து விடுதலை பெறவில்லை என்பதை இந்த நியாயப்பிரமாணம் காண்பிக்கும்படி உங்களுக்கு உள்ளதுடன், தேவனை நோக்கியதான வாழ்வு எத்தகைய தூய்மையானதாக இருக்கவேண்டும் என்பதை நீங்கள் தெளிவாகக் காணக்கூடுமாயும் உள்ளது. இரங்கும், கர்த்தாவே!*

*கர்த்தராகிய இயேசுவே, எமது தேவையிலே எமக்கு உதவும்; கிறிஸ்துவே, எமக்கிடையே தரகர் நீரே. எமது செயல்கள் எத்துனை பாவமாயும், அநீதியாயும் கறைபட்டதாயும் உள்ளன! கிறிஸ்துவே, நீரே எமது ஒரேயொரு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும். இரங்கும், கர்த்தாவே!*

பத்துக் கட்டளைகள் பின்வரும் கேள்விகளை எம்மிடம் கேட்டும்படி செய்கிறது: திரியேக தேவனிலும் மேலாக எதிலாவது அல்லது எவரிலாவது நான் அச்சம், அன்பு மற்றும் நம்பிக்கை கொண்டுள்ளேனா? நான் கர்த்தருடைய நாமத்தை என் உதடுகளிலும் என் வாழ்விலும் கனம்பண்ணியிருக்கிறேனா? நான் அவரது வார்த்தை யைக் களிப்புடன் பரிசுத்தமானதாகப் பற்றி, அந்த வார்த்தையின் பிரசங்கத்தைக் கவனமாகக் கேட்டு, எனது நாளாந்த வாழ்விலே அதனைப் பயன்படுத்தியிருக்கிறேனா? எனக்கு மேலே வைக்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் நான் கனம்பண்ணிக் கீழ்ப்படிந்திருக் கிறேனா? எனது திருமணத்தின் தூய்மையையும், எனது சிந்தை யிலும், வார்த்தையிலும், செயலிலும் எனது பாலியல் வாழ்வின் தூய்மையையும் பேணிவந்திருக்கிறேனா? சொத்தை நான் திருடி யிருக்கிறேனா அல்லது என் அயலானுடைய சொத்தைப் பாதுகாக்க உதவிடாமல் இருந்திருக்கிறேனா? வதந்திக்குச் செவிமடுப்பதாலோ அல்லது அதனை நானே பரப்புவதாலோ வம்பளத்திருக்கிறேனா? கர்த்தர் எனக்குத் தந்துள்ள அனைத்துடனும் நான் திருப்திப் பட்டிருக்கிறேனா? நியாயப்பிரமாணமானது எமது பாவத்தின் கண் கூசும் பிரதிபலிப்பாகும். தேவனுடைய நியாயப் பிரமாணந்தான் கிறிஸ்து உலகுக்காக வென்று இப்போது தனது வார்த்தையூடாகவும் திருவருட்சாதனங்களூடாகவும் விநியோகிக்கும் மன்னிப்பு எவ்வளவாக எமக்குத் தேவை என்பதை உணர்துவதற்குப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவது. பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தால் எம்மை அழைக்கிறார் எமது ஒரே நம்பிக்கையாகிய கிறிஸ்து இயேசுவிடம் திரும்பும்படியாக, ஏனெனில், அவர் எமக்காக நியாயப்பிரமானத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றி, எமது பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக மரித்தும் இருக்கிறார். மரணத்தினின்று அவரது உயிர்த்தெழுதலால், அவர் மரணத்தை வென்றார். கிறிஸ்துவிலே நாம் கர்த்தரின் சொந்த அன்பப் பிள்ளைகளாக சுவீகரிக்கப்பட்டோம்.

எனவே, தேவன் தனது நியாயப்பிரமாணத்தை மூன்று வழிகளிலே பயன்படுத்துகிறார்: முதலாவதாக, ஒரு கடிவாளம்போல, பாவத்தின் கிளர்ந்தெழுச்சிகள் அதனால் கட்டுப்படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, மிக முக்கியமாக, ஒரு கண்ணாடிபோல, எமது பாவத்தையும் இரட்சகருக்கான எமது தேவையையும் உணர்த்தும்படியாக. மின்பு, ஒரு வழிகாட்டியைப்போல, அவருக்குப் பிரியமானது என்ன என்பதை எமக்குக் கற்பிப்பதற்காக. கிறிஸ்துவால் வெல்லப்பட்ட மன்னிப்பிலே வாழ்ந்து, எமது வாழ்வு பூராக நாம் ஜெபிக்கிறோம், "இரங்கும், கர்த்தாவே!"

* *இந்தக் கைப்பிரதியின் சரிவெழுத்து வசனங்கள் பத்துக் கற்பனைகளிலே மாட்டின் லூத்தரின் பாடலாகிய, "இதோ பத்துவகை நிச்சயமான கட்டளை லூத்தரன் ஆராதனை நூலிலே கீர்த்தனை 331. (புனித லூயி: கொங்கோடியா பதிப்பகம் St. Louis: Concordia Publishing House, 1982)*

கலாநிதி A.L. பர்ரி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை